# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,577 — 1965 දෙසැම්බර් 4 වැනි සෙනසුරාදා — 1965.12.4

14,577 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. கட்டளைச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 62 ம் 105 ம் பிரிவுகளால் தொழில், தொழில் வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, குறித்த 105 ம் பிரிவின் பிரகாரம் செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

எம். எச். மொகமட்,
தொழில், தொழில் வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (அபாயகரமான சம்பவங்கள் அறிவித்தல்) ஒழுங்கு விதிகள் என வழங்கப்படலாம்.

2. தொழிற்சாலையொன்றில் நிகழும் ஒரு விபத்துப் பற்றிப் பரிசோதகரொருவருக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டுமென விதிக்கும் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 61 ம் பிரிவினது ஏற்பாடுகள் இதனகத்தேயுள்ள 1 ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட சம்பவங்களின் வகுப்புகளுக்கு விசாலிக்கப்பட்டு இயைபு படுத்தப்பட வேண்டும்.

3. கட்டளைச் சட்டத்தின் 61 ம், 62 ம் பிரிவுகளின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய அபாயகரமான சம்பவம் பற்றிய அறிவித்தல் இதனகத்தேயுள்ள 2 ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட 12 ம் பத்திரத்தின் பொருளுக்கமைய இருத்தல் வேண்டும். அது சம்பவம் நிகழ்ந்த மூன்று நாட்களுக்குள் தொழிற்சாலையை ஆட்சி புரிவோரால் அல்லது அவரது முகவரால் மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதகருக்கு அல்லது பிரதான தொழிற்சாலைப் பரிசோதகருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

### 1 ம் அட்டவணை

#### சம்பவங்களின் வகுப்புகள்

1. இயந்திர சக்தியால் இயக்கப்படும் சுழல் பாத்திரம், சக்கரம், சாணைக்கல் அல்லது சக்கரச் சாணை வெடித்தல்.

2. ஆட்களை அல்லது பொருள்களை உயர்த்துவதில் அல்லது தாழ்த்துவதில் உபயோகிக்கப்படும் பாராஞ்சாம்பி, பாரந்தூக்கி, கம்பிமுறுக்கி அல்லது உயர்த்துபொறி அல்லது மற்றும் உபகரணம் முறிதல் அல்லது பிசகுதல், அல்லது அதன் பகுதி முறிதல் ; (சங்கிலியொன்றின் அல்லது வடக்கவணின் முறிதல் நீங்கலாக) அல்லது பாராஞ்சாம்பியொன்று கவிழ்தல்.

3. ஆட்கள் வேலை பார்க்கும் யாதாயினும் அறையின் அமைப்பிற்கு அல்லது இடத்திற்கு அல்லது அங்குள்ள இயந்திரத்திற்கும் அல்லது பொறித் தொகுதிக்கும், உபகரணத்திற்கும் பொருளுக்கும் சேதம் விளைவிப்பதும், அத்தகைய அறையில் அல்லது இடத்தில் சாதாரண வேலையை முற்றிலும் இடைநிறுத்துதலை அல்லது பொறியை 5 மணி நேரத்துக்குக் குறையாமல் நிறுத்துதலை விளைவிப்பதுமான வெடித்தல் அல்லது தீ, அத்தகைய வெடித்தல் அல்லது தீ—

(i) தூசிவாயு அல்லது ஆவி பற்றுவதால், அல்லது

(ii) செலுலோயிட் அல்லது செலுலோயிட்டால் முற்றிலும் அல்லது ஓரளவுக்கு ஆக்கப்பட்ட பொருள்கள் பற்றுவதால் ஏற்படுமாயின்

4. வெடித்தலோடு அல்லது தீயோடு கூடிய அல்லது மின் இயந்திர பொறித் தொகுதிக்கு அல்லது உபகரணத்திற்கு அமைப்பு சம்பந்தமான சேதத்தை விளைவிப்பதும் 5 மணி நேரத்துக்குக் குறையாமல் அத் தொகுதி வேலை செய்வதை தடுப்பதுவும் அல்லது அதன் உபயோகமின்மைக்குக் காரணமாக இருப்பதுமான மின் குறுக்கு ஓட்டம் அல்லது மின் இயந்திர பொறித் தொகுதியின் பிசகுதல்.

5. ஆட்கள் வேலை பார்க்கும் யாதாயினும் அறையைப் பாதிப்பதும் 4 மணி நேரத்துக்குட்படாமல் அங்கு சாதாரண வேலையை முற்றிலும் இடைநிறுத்துவதுமான வெடித்தல் அல்லது தீ.

6. (காற்று உட்பட) யாதாயினும் வாயுவின் அல்லது வாயுக்களின் அல்லது ஆவியின் அல்லது யாதாயினும் திரவத்தின் அல்லது வாயுவின் அமுக்கத்தால் ஏற்படும் அல்லது திடப் பொருளின் வாயு மண்டல அமுக்கத்தை விட கூடுதலான அமுக்கமொன்றில் சேகரித்தற்கு உபயோகிக்கப்படும் ஏந்துகலத்தின் அல்லது கொள்கலத்தின் வெடித்தல்.

7. (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 34 (14 ம்) பிரிவில் வரையறுக்கப்பட்டவாறு நீராவிக் கொதிகலம் ஒன்றின் அல்லது யாதாயினும் நீராவிக் குழாயின் அல்லது ஊட்டு குழாயின் வெடித்தல்.

8. ஒரு தொழிற்சாலையின் பாகமாக அமைந்துள்ள அல்லது ஒரு தொழிற்சாலையின் வளவினுள் அல்லது அத்தொழிற்சாலையைச் சேர்ந்த தோட்டத்தினுள் யாதாயினும் தளம், மேற்தட்டுக்கூரை, பாலம், குடை வழி, புகைக் குழாய், சுவர் அல்லது கட்டடம் முறிதல் அல்லது இறங்குதல்.

### 2 ம் அட்டவணை

#### பத்திரம் 12

(128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் 61 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 62 (1) ம் பிரிவின் கீழ் அபாயகரமான சம்பவங்கள் பற்றிய அறிவித்தல்.

1. தொழிற்சாலையின் ஆட்சியாளர் :—

   (அ) பெயர் :————.

   (ஆ) விலாசம் :————.

   (இ) நடைபெறும் தொழில் :————.

2. அபாயகரமான சம்பவம் நிகழ்ந்த இடம் :—

   (i) விலாசம் (மேலே 1 ல் கூறப்பட்டதினின்றும் வேறாயின்) :——.

   (ii) சரியான இடம் :————.

   (iii) அங்கு நடைபெறும் வேலையின் தன்மை :————.

3. அபாயகரமான சம்பவம் :—

(அ) தேதியும் நேரமும் :————.

(ஆ) அபாயகரமான சம்பவம் நேர்ந்த விதம் பற்றிய முழு விபரங்கள் (வேண்டுமாயின் மறுபக்கத்தில் தொடர்ந்து எழுதுக) :————.

4. அபாயகரமான சம்பவம் பொதுப் பதிவு ஏட்டில் பதியப்பட்டுள்ளதா?

.................................................
ஆட்சியாளரின் அல்லது முகவர்களின் ஒப்பம்.

தேதி :————.

12–434/1.

---

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. கட்டளைச்சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 15 ம், 105 ம் பிரிவுகளால் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, குறித்த 105 ம் பிரிவின்படி செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொகமட்,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு
அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1 ந் வ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (சுகாதார வசதிகள்) ஒழுங்கு விதிகளென வழங்கப்படலாம்.

2. (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக்கட்டளைச்சட்டத்தின் 80 ம் பிரிவின் ஏற்பாடுகள் இயைபுடையனவாக உள்ள ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒவ்வொரு மின்நிலையத்துக்கும் இவ்வொழுங்குவிதிகள் இயைபுடையனவாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகள் இயைபுடையனவாக உள்ள எத்தலத்திலும் பெண்கள் வேலைக்கமர்த்தப்படுமிடத்து ஒவ்வொரு 25 பெண்களுக்கும் ஏற்ற ஒரு மல கூடமாயினும், ஆண்கள் வேலைக்கமர்த்தப்படுமிடத்து, ஒவ்வொரு 25 ஆண்களுக்கும் (ஏற்ற ஒரு சலகூடமாக மாத்திரம் இராத) ஏற்ற ஒரு மலகூடமாயினும் இருத்தல்வேண்டும்.

ஆயினும், நூறுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலைக்கமர்த்தப்பட்ட தலமொன்றில், போதிய சலகூட வசதியிருப்பின், 100 ஆண்களுக்கு மேலதிகமாகவுள்ள ஒவ்வொரு 40 ஆண்களுக்கும் அத்தகைய ஒரு மலகூடமிருப்பின் போதியதாகும்.

மேலும், அதேபோன்று 500 க்கு மேற்பட்ட ஆண்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தலமொன்றில், அத்தகைய சலகூடவசதியிருப்பின், ஒவ்வொரு 60 ஆண்களுக்கும் அத்தகைய ஒரு மலகூடமிருப்பின் போதியதாகும்.

4. முற்போந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தேவைப்படும் மலகூடங்களின் தொகையைக் கணிக்கும் விடயத்தில், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 25, 50 அல்லது 60 க்குட்பட்ட எத்தொகையினரும் 25, 50 அல்லது 60 ஆகக் கருதப்படல்வேண்டும்.

5. மலகூடமொவ்வொன்றும் போதிய காற்றோட்டமுடையதாயிருத்தல்வேண்டும். அம்மலகூடத்தையும் உணவுப்பண்டங்கள் தயாரிக்கப்படும் யாதாயினும் வேலையறை ஒன்றையும் இணைத்தற்கு திறந்த வழியொன்று மூலமன்றியோ இரண்டிற்குமிடையேயுள்ள காற்றோட்டமுடைய இடைவெளிமூலமன்றியோ வழி யாதுமிருத்தலாகாது.

6. (ஒரு சலகூடமாக மாத்திரம் உபயோகித்தற்குரியதாகவிராத) மலகூடம் ஒவ்வொன்றும் மேற்கூரை உடையதாய் இருப்பதோடு அங்கு தனிமையிருக்கும்வண்ணம் பிரித்து அடைக்கப்பட்டுமிருத்தல்வேண்டும். அதற்குச் சரியான கதவொன்றும் தாழ்களும் இருத்தல்வேண்டும். ஆட்கள் வேலைசெய்கின்ற அல்லது போய்வருவதற்கான தொழிற்சாலையின் ஏனைய பகுதிகளிலிருந்து காணமுடியாதவாறு சலகூடங்கள் அமைக்கப்படவேண்டும் அல்லது மறைக்கப்படவேண்டும்.

7. தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் வசதியாக அடையக் கூடியவாறு மலகூடம் அமைக்கப்படவேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகள் இயைபுடையனவாக உள்ள எத்தலத்திலும் இருபாலாரும் வேலைக்கமர்த்தப்படுமிடத்து, யாதாயினுமொரு மலகூடத்தின் கதவுதிறந்திருக்கும் பொழுதும் அதனுட்புறம் மறுபாலார் வேலை செய்யக்கூடிய அல்லது அடையக்கூடிய எந்த இடத்திலிருந்தும் தெரியாதவாறு ஒவ்வொரு பாலாரின் மலகூடங்களும் அமைக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் இருத்தல்வேண்டும். ஒரு பாலாரின் மலகூடமும் மறு பாலாரின் மலகூடமும் சேர்ந்திருப்பின் வழிகள் தனித்தனியே இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பாலாருக்குரிய மலகூடத்தை ஏற்ற விளம்பரம் ஒன்றின் மூலம், தொழிலாளரிற் பெரும்பான்மையோருக்குப் புரியும் மொழியிற் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு "ஆண்களுக்கு மாத்திரம்" அல்லது "பெண்களுக்கு மாத்திரம்" என்னும் சொற்கள் அதன்மீது பொறிக்கப்பட்டு குறித்தல்வேண்டும். அவ்விளம்பரத்தின்மீது, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, ஓர் ஆணின் அல்லது பெண்ணின் உருவம் வரையப்படுதல்வேண்டும்.

9. மலகூடம் ஒவ்வொன்றும் பராமரிக்கப்பட்டு துப்புரவாக வைத்திருக்கப்படவேண்டும். மலகூடத்தில் விளக்குகளை ஏற்றுதற்குத்தக்க ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

10. பெண்களுக்குரிய மலகூடங்களில் தக்கவாறு திட்டமிடப்பட்ட கொள்கலங்கள் மூடிகளுடன் அல்லது மற்றும் ஏற்ற அகற்றும் வசதிகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு மலகூட வரிசைக்கும் அருகே வசதியாக அடையக் கூடிய ஏற்ற நீர்க்குழாய்கள் அல்லது நீர்கொண்ட பாத்திரங்கள் வைக்கப்படுதல் வேண்டும்.

12. வினைத்திறமையுள்ள நீருடைய சாக்கடை முறையுடன் இணைக்கப் பட்டனவல்லாத, மலகூடங்கள் பொதுச்சுகாதார பரிசோதகரின் அங்கீகாரம் பெற்ற அல்லது அத்தகைய உத்தியோகத்தர் இல்லாவிடத்து, பிரதான தொழிற்சாலைப் பரிசோதகரின் அல்லது மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதகரின் அங்கீகாரம் பெற்ற நீர் அடைமுறையின் தேவைகளுக்கமைந்தனவாயிருத்தல் வேண்டும்.

13. ஆண்களின் உபயோகத்திற்கென ஒவ்வொரு 50 ஆண்களுக்கும் 2 அடி வீதமான நீளத்திற்குக் குறையாத சலகூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

ஆயினும், வேலை பார்க்கும் ஆண்கள் 500 க்கு மேற்படின், முதலாவது 500 வரை ஒவ்வொரு 50 ஆண்களுக்கும் ஒரு சலகூடம் இருப்பின் போதியதாகும். 500 க்கு மேற்பட்ட ஒவ்வொரு 100 ஆண்களுக்கும் ஒரு சலகூடம் போதியதாகும்.

இப்பிரமாணத்தின் கீழ் தேவைப்படும் சலகூட இடவசதியைக் கணிக்குமிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, 50 அல்லது 100 க்குட்பட்ட எத்தொகைத்தொழிலாளரும் 50 அல்லது 100 ஆகவே கருதப்படுதல் வேண்டும்.

14. ஒவ்வொரு மலகூடத்தினதும் சலகூடத்தினதும் சுவர்களும் பாவுகளும் மறைப்புகளும் வெள்ளை அடிக்கப்படவேண்டும் அல்லது நிறம் பூசப்படவேண்டும். வெள்ளை அடித்தலும் நிறம் பூசுதலும் ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் ஒரு முறையாயினும் செய்யப்படுதல் வேண்டும்.

ஆயினும், பளிங்கு ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது மேற்பரப்பை அழுத்தமாக, மினுக்கமாக அல்லது உட்செல்ல விடாததாக இருக்கும் வண்ணம் மற்றும் வகையில் நன்கு அமைக்கப்பட்டவையும் நான்கு மாதகாலத்துக்கு ஒரு முறையாயினும் ஏற்ற சுத்திகரிப்புத் திரவத்தால் அல்லது தொற்றுநீக்கியால் கழுவப்படுவனவுமான சுவர்களை, பாவுகளை அல்லது மறைப்புகளையுடைய சலகூடங்களுக்கு இப்பிரமாணம் இயைபுடையதன்று.

15. வெள்ளை அடித்த அல்லது நிறம் பூசிய தேதிகள் 1961 ம் ஆண்டு யூன் மாதம் 23 ந் தேதி வெளிவந்த 12,494 ம் இல. வர்த்தமானியின் அனுபந்தத்திற் பிரசுரிக்கப்பட்ட 1960 ம் ஆண்டின் தொழிற்சாலை (1 ம் இல.) ஒழுங்குவிதிகளினகத்தேயுள்ள முதலாவது அட்டவணையிற் குறிக்கப்பட்ட பத்திரத்திற் பதியப்படவேண்டும்.

12–434/2

---

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. கட்டளைச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 47 ம், 105 ம் பிரிவுகளால் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு குறித்த 105 ம் பிரிவின்படி செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொகமட்,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசம்பர் மீ 1 ந் வ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (கழுவும் வசதிகள் பொது) ஒழுங்குவிதிகளென வழங்கப்படலாம்.

2. இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அதன் ஊழியரின் உபயோகத்திற்குப் போதியவையும் ஏற்றவையுமான கழுவும் வசதிகள் உதவப்படுவதோடு அவை பேணப்படுதலும் வேண்டும். அவ்வசதிகள், சவர்க்காரத்தை நகத்தூரிகைகளை அல்லது துப்புரவு செய்தற்கேற்ற ஏனைய சாதனத்தையும் உலர்த்தும் வசதிகளையும் உட்படுத்துவன. அவ்வசதிகள் வசதியாக அடையக்கூடியனவாக இருப்பதுடன் துப்புரவாகவும் இருத்தல் வேண்டும்.

3. கழுவும் வசதிகள் பின்வருவனவற்றை உட்படுத்தல் வேண்டும் :—

(அ) இரண்டடிக்கு மேற்படாத இடைவெளிகளில் குழாய்வாயில்களை அல்லது கூர்நுனிக்குழாய்களையுடைய தொட்டியொன்று, அல்லது

(ஆ) குழாய்கள் இணைக்கப்பட்ட கழுவுவட்டைகள், அல்லது

(இ) ஊற்றுவகை வட்டத்தொட்டி.

4. ஒவ்வொரு தொட்டியும் வட்டகையும் அழுத்தமான, நீர் உட்செல்லவிடாத உட்புறத்தையுடையனவாயிருத்தல் வேண்டும். அவற்றிற்குக் கழிவுநீர்க் குழாயும் அடைப்பமும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு தொட்டியின், குழாயின், கழுவுவட்டகையில், தாரையின் கீழும் அதனையடுத்து அருகாமையிலும் உள்ள தளம் அல்லது தரை அழுத்தமானதாயும் நீர் உட்செல்லவிடாததாயுமிருக்கும் வண்ணம் அமைக்கப்படுவதோடு, கழிவுநீர் செல்லுதற்கு வடிகால் உடையதாயுமிருத்தல் வேண்டும்.

6. பெண்தொழிலாளர் வேலை பார்க்குமிடத்து, தனிப்பட்ட கழுவும் வசதிகள் உதவப்படுவதோடு, மற்றப்பாலார் வேலை செய்யுமிடத்திலிருந்து உட்புறம் காணமுடியாதவண்ணம் அடைக்கப்பட்டும் மறைக்கப்பட்டுமிருத்தல் வேண்டும். அத்தகைய வசதிகளின் வாயிலில் துலக்கமான விளம்பரமொன்று தொழிலாளரிற் பெரும்பான்மையோருக்குப்புரியும் மொழியில் "பெண்களுக்கு மாத்திரம்" என்னும் சொற்கள் அதன்மீது பொறிக்கப்பட்டதாயும் ஒரு பெண்ணின் உருவம் அதன்மீது வரையப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

7. கழுவும் வசதிகளுக்கு, தொழிற்சாலையில் வேலைபார்க்கும் ஒவ்வொரு ஆளுக்கும் நாளொன்றுக்கு 2 கலன் வீதத்திற்குக் குறையாது நீர் வழங்கக்கூடிய நீர்வசதி இருத்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு தொழிற்சாலையினும் ஊழியரின் தேவைக்குக் குழாய் மூலம் நீர் வழங்கும் போதிய தொகை தாரைகள் அமைக்கப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும். பெண் தொழிலாளரின் உபயோகத்திற்கான தாரைகள் சிற்றறைகளில் அடைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆயினும், குறித்த எத்தொழிற்சாலை விடயத்திலும் அல்லது அதன் பகுதி விடயத்திலும் இவ்வொழுங்கு விதியின் தேவையாதாயினும் இயைபில்லாததென அல்லது செயற்படுத்தமுடியாததெனப் பிரதான தொழிற்சாலைப் பரிசோதகர் திருப்திப்படின் அல்லது மற்றும் காரணங்களை முன்னிட்டு அவசியமில்லையெனக் கருதின், அவர் (தமது தற்றுணிபில் திருப்பிப்பெற்றுக்கொள்ளக்கூடிய) அத்தாட்சிப்பத்திரம் மூலம் எழுத்தில் அப்பத்திரத்திற் குறிக்கக்கூடிய அளவுக்கும், அதிற் கூறப்பட்ட நிபந்தனைக்கு அமையவும் அத்தகைய தேவையினின்றும் அத்தொழிற்சாலையை அல்லது அதன் பாகத்தை விலக்கலாம்.

9. ஒரு தொழிற்சாலையில் குழாய் மூலமான நீர் வசதி இல்லாவிடத்து, ஊழியரின் உபயோகத்திற்கு, குழாய் வாயிலால் நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்ற கொள்கலங்களில் நீர் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### அட்டவணை

1. கழிவு வட்டகைகள் இருப்பின், தனித் தனிக்குழாய் வாயிலையுடைய ஒவ்வொரு வட்டகையும் 20 அங்குல நீளத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும். எந்த ஒரே சமயத்திலும், வேலைபார்க்கும் ஒவ்வொரு 20 ஆட்களுக்கும் அத்தகைய வட்டகையொன்று இருத்தல் வேண்டும்.

2. தொட்டிகளிருப்பின், எந்த ஒரே சமயத்திலும் வேலை பார்க்கும் ஒவ்வொரு 20 ஆட்களுக்கும் நேரான தொட்டியாயின் 2 அடி நீளமுள்ளதாயினும் வட்டத்தொட்டியாயின் 20 அங்குல வெளிச் சுற்றளவுள்ளதாயினும் இருத்தல் வேண்டும்.

12–434/3

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இலக்க கட்டளைச்சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 13 ம், 105 ம் பிரிவுகளால் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, குறித்த 105 ம் பிரிவின்படி செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொகமட்,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (விளக்கு அமைப்புப் பொது நியம) ஒழுங்குவிதிகளென வழங்கப்படலாம்.

2. ஆட்கள் ஒழுங்காக வேலைபார்க்கும் ஒவ்வொரு தொழிற்சாலையின் ஒவ்வொரு பகுதியினும் ஒளிர்வுச்செறிவு யாதாயினும் தரையிலிருந்து அல்லது வேலைசெய்யும் மட்டத்திலிருந்து 3 அடி உயரத்திலுள்ள இடைத்தளத்தில் அளக்கப்பட்ட 5 அடி மெழுகு வர்த்திகளுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

ஆயினும், வெளிச்சத்தின் அல்லது ஒளிர்வின் மூலங்களினது அமைப்பு உயரம் தரையிலிருந்து அளக்கப்படுமிடத்து அவசியம் 20 அடிக்கு மேற்பட நேரிடின் அல்லது அறையின் அமைப்பு அல்லது நிலையான பொறியின் அல்லது பொறித்தொகுதியின் நிலை அல்லது கட்டு இந்நியமத்தை ஒரே சீராக அடைவதைத் தடுப்பின், குறித்த மட்டத்தில் ஒளிர்வுச் செறிவு 2 அடி மெழுகு வர்த்திகளுக்கு குறையாமலும் வேலை உண்மையாக நடைபெறும் இடத்தில் ஒளிர்வுச் செறிவு 5 அடி மெழுகுவர்த்திகளுக்குக் குறையாமலு மிருத்தல் வேண்டும்.

3. ஆட்கள் வேலை பார்க்கும் மற்றும் சகல உட்புறங்களிலும் தரை மட்டத்தில் அளக்கப்பட்ட ஒளிர்வுச்செறிவு அரை (0·5) அடி மெழுகு வர்த்திக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

4. பொது வெளிச்சமூலமொவ்வொன்றும் இயல்பான பார்வைப் பாதைக்கு நன்குமேலே இருக்கும்வண்ணம் போதிய உயரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. யாதாயினும் தல வெளிச்சமூலம் அதாவது தனிப்பட்ட தொழிலாளர் ஒருவர் அல்லது ஒருவருக்குச் சமீபத்தில் ஒருவராக வேலை செய்யும் தொழிலாளர் தொகுதியொன்று வேலை பார்க்கும் குறித்த பிரதேசமொன்றிற்கு அல்லது பிரதேசத்தின் பகுதியொன்றுக்கு ஒளிதரும் பொருட்டு அமைக்கப்பட்ட செயற்கை வெளிச்சமொன்று, சாதாரண வேலைத்தலமொன்றில் வேலை பார்க்கும் ஒவ்வொரு ஆளின் கண்களும் கூசுவதைத் தடுக்கும் ஒளிபுகாபொருளாலான ஏற்ற மறைவொன்றை அல்லது வெளிச்சமூலத்தை முற்றிலும் மறைத்தற்கு மற்றும் பயன்படும் சாதனத்தை உடையதாயிருத்தல் வேண்டும்.

6. வழுவழுப்பான அல்லது மெருகிட்ட பரப்பிலிருந்து தொழிலாளரின் கண்களுக்குள் ஒளி பிரதிபலிப்பதனுல் அசௌகரியம் அல்லது காயம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஏற்ற திரைமூலம் அல்லது மற்றும் பயன்படத்தக்க முறைகள் மூலம் நியாயமான அளவுக்கு சாத்தியமான வரையில் ஒழுங்குகள் செய்யப்படுதல் வேண்டும்.

7. வேலைபார்க்கும் எவருக்கும் கண் இளைப்பை அல்லது விபத்து ஆபத்தை ஏற்படுத்தும் நிழல்கள் உண்டாவதைத் தடுப்பதற்கு நியாயமான அளவுக்குச் சாத்தியமான வரையில் போதிய முறைகள் கையாளப்படுதல் வேண்டும். சகல யன்னல்கள், வான்சாளரங்கள், செயற்கை விளக்குகள், உபகரணங்கள் ஆகியவற்றைத் துப்புரவாகவும், தடையாதுமின்றியும், ஏற்ற சீரான நிலையிலும், பழுதின்றியும் வைத்திருத்தல் தொழிற்சாலையின் ஆட்சிபுரிவோரது கடமையாகும்.

8. மாறும் வெளிப்புறநிலைமைகளுக்கேற்றவாறு ஒளிர்வை வசதி செய்தற்கும் அதனிடமிருந்து கண்கூசுதல் ஏற்படுவதைத் தவிர்த்தற்கும் ஏற்ற சீராக்கும் உபாயங்களையுடைய யன்னல்களை அமைப்பது தொழிற்சாலையின் ஆட்சிபுரிவோரது கடமையாகும்.

9. இயற்கையான வெளிச்சத்தைப்பெறும் சாதனம் ஒரு தொழிற்சாலையினது தரைப்பரப்பின் 10 வீதத்திற்குக் குறைவாயிருப்பின் அத்தகைய தொழிற்சாலையினுள் எவராயினுமொருவரை வேலை செய்யுமாறு கேட்பதாகாது அல்லது அனுமதிப்பதாகாது.

10. ஒவ்வொரு யன்னலும் கூரைச் சாளரமும் செயற்கை வெளிச்சப் பொருத்தலும் துப்புரவாகவும் தடையாதுமின்றியும் பேணப்படுதல் வேண்டும்.

11. வேலையின் அல்லது செய்முறையின் தன்மைக்கு வெளிச்சத்தைப் போதியதாகவும் ஏற்றதாகவும் செய்தற்கு வேண்டிய மேலதிக ஒளிர்வையும் வசதிசெய்யவேண்டுமென்பதற்கு மாறுபாடின்றி இவ்வொழுங்குவிதிகளிற் குறிக்கப்பட்ட நியமங்களிருத்தல் வேண்டும்.

12–434/4

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. கட்டளைச்சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 53 ம், 105 ம் பிரிவுகளால் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, குறித்த 105 ம் பிரிவின்படி செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொகமட்,

தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு, 1.12.1965.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (கண்பாதுகாப்பு) ஒழுங்குவிதிகளென வழங்கப்படலாம்.

2. பின்வரும் செய்முறைகளில் அல்லது செயல்களில் ஈடுபடும் அல்லது அவை நடைபெறுவதற்கு நெருங்கிய அருகாமையிலுள்ள ஆட்களின் பாதுகாப்புக்கு, பயன்படும் திரைகள் அல்லது ஏற்ற காப்பு மூக்குக்கண்ணாடிகள் உதவப்படுதல் வேண்டும் :—

(அ) சுழல் சக்கரத்திடம் அல்லது இயந்திர சக்தியால் செலுத்தப்படும் வட்டத்தட்டிடம் பிடிப்பதன்மூலம் உலோகங்களில் அல்லது உலோகப்பொருள்களின் உலர்வுக்கரைசல் ;

(ஆ) காப்பு மூக்குக்கண்ணாடிகளின் அல்லது ஒரு திரையின் உபயோகம் கைக்கருவிகளால் செய்யப்படும் வேலையை அல்லது திருப்புதலைப் பெரிதும் பாதிக்கக்கூடிய நிதார்த்தமான திருப்புதலல்லாது, உலர்வுடன் செய்யப்படும் மற்றும் வேலைவிடயத்தில் இரும்பில்லா உலோகங்களை அல்லது வார்ப்பிரும்பை அல்லது அத்தகைய உலோகங்களாலான அல்லது அத்தகைய இரும்பாலான பொருள்களை (வெளிப்புறமாக அல்லது உட்புறமாக) திருப்புதல் ;

(இ) மின், ஒக்ஸி அஸிற்றிலீன் அல்லது இவைபோன்ற செய்முறைகளால் உலோகங்களை இணைத்தல் அல்லது வெட்டுதல் ;

(ஈ) கை ஆயுதங்களைக்கொண்டு அல்லது கொண்டுசெல்லக்கூடிய மற்றும் ஆயுதங்களைக் கொண்டு நடாத்தப்படும் பின்வரும் செய்முறைகள் அல்லது செயல்கள் அதாவது, உலோகத்தை அகற்றுதலை விளைவிப்பதான உலோக வார்ப்புக்களைச் செப்பமாக்குதல் ; கொதிகலங்களிலிருந்து அல்லது மற்றும் பொறித் தொகுதியிலிருந்து அல்லது கப்பல்களிலிருந்து குளிர் தறையாணிகளை அல்லது அச்சாணிகளை (துளைத்தல் அல்லது அமுக்குதல் உட்படாத) துண்டித்தல் அல்லது அறவெட்டுதல், அல்லது கொதிகலங்களின் அல்லது கப்பற்றகடுகளின் துண்டுகளைவெட்டியெடுத்தல் அல்லது செதில்களை அகற்றுதல், அல்லது, கல்லை, கொங்கிரீட்டை அல்லது கழிவை உடைத்தல் அல்லது ஒழுங்கு படுத்தல்;

(உ) அரிக்கும் திரவங்களைக் கையாளுதல் ;

(ஊ) கண்களுக்குக் காயம் அல்லது அசௌகரியம் உண்டுபண்ணும் புகைகளால் வேலை பார்க்கும் ஆட்கள் பாதிக்கப்படும் செய்முறைகள் ;

(எ) கண்கூசுதலாலும் அதிதீவிரக்கதிர் வீசுதலாலும் கண்களைப் பாதிக்கக்கூடிய வில்விளக்குமூலம் இணைத்தல் ஒக்ஸி அசிற்றிலீன் சுவாலை மூலம் இணைத்தல் உலைவேலை அல்லது மற்றும் யாதாயினும் வேலைகளில் ஆட்கள் ஈடுபடும் செய்முறைகள் ;

(ஏ) மனிதனின் கண்களுக்குக் காயம் உண்டுபண்ணக்கூடிய மற்றும் யாதாயினும் செய்முறை அல்லது வேலை.

12–434/5

---

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. கட்டளைச்சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 105 ம் பிரிவால் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, குறித்த 105 ம் பிரிவின் பிரகாரம் செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொகமட்,

தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு.
1965 ம் ஆம் டிசம்பர் மீ 1 ந உ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (சாப்பாட்டு அறைகள்) ஒழுங்குவிதிகளென வழங்கப்படலாம்.

2. ஐந்து ஆட்களுக்கு குறையாமல் வேலைபார்க்கும் தொழிற்சாலையொன்றில், இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க அதன் தொழிலாளர் தங்கள் சாப்பாட்டை அருந்த உபயோகித்தற்கு ஏற்ற, போதிய புறம்பான சாப்பாட்டு அறைகளை அத்தொழிற்சாலையின் ஆட்சியாளர் உதவுதல் வேண்டும்.

3. சாப்பாட்டு அறைகள் கெட்டியாக அமைக்கப்பட்டிருப்பதோடு வேலை அறைகளிலிருந்து நேரடியாக அடையக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். சாப்பாட்டு அறைகளின் தரைகள் நீர் உட்செல்ல விடாத பொருளால் அமைக்கப்பட்டனவாயும் இலகுவாய் கழுவக்கூடிய மேற்பரப்பை உடையனவாயுமிருத்தல் வேண்டும்.

4. எக்காலங்களிலும் வானிலையிலிருந்து போதிய பாதுகாப்பு அளிக்கக் கூடியவாறு சாப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. சாப்பாட்டு அறைகளுக்குப் போதிய காற்றோட்டமும், வெளிச்சமும் இருத்தல் வேண்டும்.

6. சாப்பாட்டு அறைகளில் போதிய தொகை மேசைகளும், கதிரைகளும் அல்லது வாங்குகளும் இருத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு சாப்பாட்டு அறையிலும் குடிதண்ணீர் கிடைக்கச் செய்தல் வேண்டும் ; குழாய்த்தண்ணீர் கிடைக்காத இடத்து "குடிதண்ணீர்" என்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாக எழுதப்பட்ட ஏற்ற கொள்கலங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. சாப்பாட்டறை ஒவ்வொன்றிலும் மேல்நோக்கிய கூர்நுனிக்குழாயொன்றிலிருந்து தண்ணீர்வருமிடத்தன்றி கழுவுதற்கு வசதிகளையுடைய போதியனவும் ஏற்றவையுமான கிண்ணங்கள் அல்லது குடிக்கும் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

9. சாப்பாட்டறையொவ்வொன்றிலும் மிகுதி நீர் வடிதற்கேற்ற வசதிகள் ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

10. சாப்பாட்டறை ஒவ்வொன்றும் எப்பொழுதும் துப்பரவாக வைக்கப்படல் வேண்டும்.

11. சாப்பாட்டறை ஒவ்வொன்றிலும் கழிவுப்பொருள்களைப் போடுதற்கு ஏற்ற மூடிகளையுடைய தொட்டிகள் அல்லது கொள்கலங்கள் வைக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.

12. தேவையெனக் கருதப்படுதற்கு அமைய நாளாந்தரம் அல்லது அடிக்கடி கழிவுப்பொருள்களை அகற்றுதற்கும் தொட்டிகளை அல்லது கொள்கலங்களை துப்புரவுசெய்தற்கும் போதிய சேவை ஒழுங்கு சாப்பாட்டறை ஒவ்வொன்றிற்கும் செய்யப்படுதல் வேண்டும்.

13. சாப்பாட்டறை ஆட்சியாளரால் நியமிக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த ஒருவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

14. சாப்பாட்டறை ஒவ்வொன்றின் சுவர்களும், பாவுகளும், மறைப்புகளும் 12 மாத காலத்துக்கு ஒருமுறை கழுவப்படுதல் வேண்டும், வெள்ளையடிக்கப்படுதல் வேண்டும், நிறம் பூசப்படவேண்டும் அல்லது வர்ணப்பசை பூசப்படவேண்டும், வர்ணப்பசை பூசப்பட்ட மேற்பரப்புகளின் விடயத்தில் பிரதான தொழிற்சாலைப் பரிசோதகரின் அல்லது மாவட்ட தொழிற்சாலை பரிசோதகரின் சமயோசித விருப்பப்படி அத்தகைய காலம் மாற்றப்படலாம்.

15. கழுவிய, வெள்ளையடித்த, நிறம் பூசிய அல்லது வர்ணப்பசை பூசிய தேதிகள் 1961 ம் ஆண்டு யூன் மாதம் 23 ந் தேதி வெளிவந்த 12,494 ம் இல. வர்த்தமானியின் அநுபந்தத்திற் பிரசுரிக்கப்பட்ட 1960 ம் ஆண்டின் தொழிற்சாலை (1 ம் இல.) ஒழுங்குவிதிகளின் அகத்தே உள்ள முதலாம் அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள பத்திரத்தில் பதியப்படவேண்டும்.

### அட்டவணை

1. எச்சமயத்திலும் தொழிலாளரின் 30 சத வீதத்தினரையாவது கொள்ளக்கூடியதாக சாப்பாட்டறை அமைக்கப்படவேண்டும். ஆயினும், குறித்த எத்தொழிற்சாலையிலும், அல்லது எத்தொழிற்சாலையின் வகுப்பிலும் அல்லது விவரணத்திலும் பிரதான தொழிற்சாலைப் பரிசோதகர் அல்லது மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதகர் எழுத்திலுள்ள அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் அத்தகைய வீதத்தை மாற்றலாம்.

2. மேசைகளும், கதிரைகளும், அல்லது வாங்குகளும் தவிர்ந்த உபகரணங்கள், பொருத்திகள், சௌகரியங்கள், தளவாடங்கள் ஆகியன வைக்கப்பட்டுள்ள இடம் நீங்கலாக சாப்பாட்டறையின் இடப்பரப்பு, அதை உபயோகிக்கவேண்டிய ஆள் ஒவ்வொருவருக்கும் 10 சதுர அடிக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

12–434/6

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.